Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 100/2018**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமாவளவன் | கிராமம் | : | ஈட்டியம்பட்டி |
| தந்தை பெயர் | : | பழனி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 29 | மாவட்டம் | : | தருமபுரி |

(1-ம் எதிரி ஆஜர். எதிரிகள் 2,3 ஆஜர் இல்லை. எதிரிகள் 2,3 சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04**th** Day of **August 2026.**

**முதல் விசாரணை**

நான் ஈட்டியம் பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன்.

சுமார் 22.03.2018 தேதியன்று காலை 9.00 மணியளவில் எனது அப்பா சாட்சி-2 பழனி எங்கள் நிலத்தில் செடி பிடுங்கி கொண்டு இருந்த போது எதிரிகள் வெங்கட்ராமன் , சிற்றரசு மற்றும் உத்தரகுமார் ஆகியோர் எனது அப்பாவை அடித்தார்கள். நான் அதை தடுத்து ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் என்னையும் அடித்தார்கள். பின்னர் போலீசார் பகல் 12 மணிளவில் அரூர் போலீசார் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை

மகசரை என் முன்னிலையிலும் அசா-2 முன்னிலைலும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றார்கள் . இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2-து கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசர் ஏற்கனவே அசாஆ-2 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது.** வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடமானது அசா-1ன் பேரில் உள்ளதாக என்னுடைய தந்தை கூறினார். அசா-ஆ2ல் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பார்வை மகசரை என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. அதில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த சமயத்தில் நான் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். என்னையும் அடித்தார்கள் நான் அரூர் அரசு மருத்துவமனைக்கு சென்று காலை 10 மணியளவில் சென்று சிகிச்சை எடுத்து கொண்டு மாலை 4 மணிக்கு தான் வீட்டிற்கு சென்றேன். எதிரிகள் யார் யார் எங்கு எங்கு எனது அப்பாவை அடித்தார்கள் என்ற விவரம் தெரியாது. எதிரிகள் என்னையும் அடித்தார்கள். என்னை எதிரிகள் கை, கால் முதுகிலும் அடித்தார்கள். காயச்சான்றிதல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரம் குறித்து எனக்கு தெரியாது. அசா-1 கேட்டு கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 100/2018**

வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்வளவன் | கிராமம் | : | ஈட்டியம்பட்டி |
| தந்தை பெயர் | : | பழனி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 26 | மாவட்டம் | : | தருமபுரி |

(1-ம் எதிரி ஆஜர். எதிரிகள் 2,3 ஆஜர் இல்லை. எதிரிகள் 2,3 சார்பில் பா.நி.சு.சா. பிரிவு -355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04**th** Day of **August 2026.**

**முதல் விசாரணை**

நான் ஈட்டியம் பட்டியில் குடியிருந்து போட்டித் தேர்விற்காக படித்து கொண்டு இருக்கிறேன்.

சுமார் 22.03.2018 தேதியன்று காலை 9.00 மணியளவில் எனது அப்பா பழனி எங்கள் நிலத்தில் செடி பிடுங்கி கொண்டு இருந்த போது எதிரிகள் வெங்கட்ராமன் , சிற்றரசு மற்றும் உத்தரகுமார் ஆகியோர் எனது அப்பாவை அடித்தார்கள். நான் அதை தடுத்து ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் என்னையும் அடித்தார்கள். பின்னர் போலீசார் பகல் 12 மணிளவில் அரூர் போலீசார் சம்பவ இடம் வந்து சம்பவ

இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசரை என் முன்னிலையிலும் எனது அண்ணன் திருமாவளவன் முன்னிலைலும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றார்கள் . இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2-து கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசர் அசாஆ-2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா-1 என்னுடைய அம்மா என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது நிலத்தின் உரிமையாளரின் வீட்டில் இருந்தேன். சம்பவ இடத்திற்கும் நான் இருந்த இடத்திற்கும் சுமார் 30 அடி இருக்கும். சம்பவம் நடந்த இடம் எங்களுடையது தான் அது அசா-1 பேரில் உள்ளது. போலீசார் சுமார் 12 மணியளிவில் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சம்பவ இடமானது அசா-1ன் பேரில் உள்ளதாக என்னுடைய தந்தை கூறினார். அசா-ஆ2ல் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சம்பவ இடமானது அசா-1ன் பேரில் தான் இருந்தது என பார்வை மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ எவ்வாறு நடந்தது என்று போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். என்னுடைய தந்தையை எதிரிகள் யார் யார் எங்கு அடித்தார்கள் என்றால் மூவரும் கம்பியால் அடித்தார்கள் எங்கு எங்கு அடித்தார்கள் என்று தெரியாது. கம்பியை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் தற்போது நியாபகம் இல்லை. எதிரிகள் மூவரும் என்னையும் எனது அண்ணன் திருமாவளவனையும் அடித்தார்கள் யார் யார் எங்கு அடித்தார்கள் என்று நியாபகம் இல்லை. அடிப்பட்ட பின்னர் நாங்கள் அரூர்

அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளித்துக்கொண்டோம். அதனை போலீசாரிடம் தெரிவித்தோம். உடம்பில் அனைத்து அடித்தால் எங்கு எங்கு அடித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அசா-1 கேட்டு கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

நீதித்துறை நடுவர் அரூர்.

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 100/2018**

**வழக்கு சாட்சி எண். PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கல்பனா | கிராமம் | : | ஈட்டியம் பட்டி |
| கணவர் பெயர் | : | பழனி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 45 | மாவட்டம் | : | தருமபுரி |

(1-ம் எதிரி ஆஜர். எதிரிகள் 2,3 ஆஜர் இல்லை. எதிரிகள் 2,3 சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04**th** Day of **August 2026.**

**முதல் விசாரணை**

நான் ஈட்டியம் பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன்.

கடந்த 2018 ம் ஆண்டு எனக்கும் வெங்கட்ராமம் என்பவருக்கும் எனது கணவருக்கும் நிலப்பிரச்சிரனை இருந்தது. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது கணவர் பழனி எங்கள் நிலத்தில் செடி பறித்து கொண்டு இருந்தபோது எதிரி வெங்கட்ராமன் , சிற்றரசு மற்றும் உத்தரகுமார் ஆகியோர் எனது கணவரை அடித்தார்கள். நான் அதை தடுத்து ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் என்னையும் அடித்து எனது புடைவை பிடித்து இழுத்து ஜாக்கெட்டை கிழித்து கீழே

தள்ளினாகள். மேலும் எதிரிகள் கம்பிவை வைத்து அடித்து உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். இன்று என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொழுத்து என்னுடையது தான். **மேற்படி புகாரானது அசாஆ-1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

என்னை போலீசார் மீண்டும் விசாரணை செய்த போது எதிரி சிற்றரசு என்னை அடிக்கவில்லை என்றும், கெட்டவார்த்தையால் மட்டும் தான் திட்டினார் என்றும், கோவத்தில் தவறான தகவலை தந்து விட்டதாக நான் சொன்னேன். வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த நிலம் என்னுடையது தான் என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளேனே என்றால் என்னுடைய பட்டா முதலிய ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்தேன். எனது கணவர் செடி புடுங்கி கொண்டுள்ளதாக சொல்லியுள்ளேன்என்றும், அப்போது நான் எங்கு இருந்தேன் என்றால் சுமார் 10 அடி தூரத்தில் வேலை செய்து கொண்டு இருந்தேன். அப்போது என்னுடைய மகன்களும் நான் வேலை செய்து கொண்டு இருந்த உரிமையாளர்கள் வீட்டில் இருந்தார்கள். முதலில் என்னை வெங்கட்ராமம் அடித்தார். 2-தாக என்னை உத்தரகுமார் அடித்தார், பின்னர் சிற்றரசு கெட்ட வார்த்தையால் திட்டினார். என்னை எதிரிகள் முதுகிலும், தலையிலும் அடித்தார்கள், என்னுடைய சேலையையும் ஜாக்கிட்டையும் பிடித்து இழுத்தார்கள். தலையிலும் முதுகிலும் எனக்கு காயம் ஏற்பட்டது. நான் அரூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டேன். சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணத்தை நான் போலீசாரிடம் கொடுத்தேன். யார் யார் என்னை

எங்கு எங்கு அடித்தார்கள் என்றால் வெங்கட்ராமன் என்னை தலையின் இடது புறமும், உத்தரகுமார் என்னை முதுகின் வலது தோள்பட்டையிலும் அடித்தார். மேற்படி விவரத்தையும் நான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். எனது கணவரை வெங்கடராமன், உத்தரகுமார் ஆகியோர் சுமார் 5 அடி நீளம் மற்றும் 4 செ.மீ சுற்றளவு உள்ள உருளையான இரும்பு கம்பியால் வலதுபக்க தலையில் அடித்தனர். மேற்படி கம்பியை போலீசார் எடுத்து கொண்டார்களா என்றால் நான் அதை பார்க்கவில்லை. எதிரிகள் கம்பியால் அடித்துவிட்டார்கள் என்று தவறாக சொல்கிறேன் என்றும், அதனால் தான் கம்பியை கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. நிலம் சம்மந்தப்பட்ட எந்த ஆவணமும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகன்களும் என்னுடன் தான் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். இந்நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் சட்டத்திற்கு புறம்பாக சாரயம் விற்றதாக ஒப்புக்கொண்டு நான் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்துயுள்ளேன் என்றும் நான் சட்டதிற்கு புறம்பாக சாரயம் விற்றதாக எதிரிகள் புகார் தெரிவித்தால் நான் அவர்கள் மீது உண்மைக்கு மாறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது என்னுடன் 10 நபர்கள் வேலை செய்து கொண்டு இருந்தார்கள். மேற்படி நபர் இருந்த போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அவர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் அதைப்பற்றிய விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய கிழிந்த ஜாக்கெட் மற்றும் புடைவை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் அவர்கள் கேட்டார்கள் நான் கொடுக்கவில்லை. மேற்படி சம்பவம் நடக்காததால் தான் போலீசாரிடம் எனது கிழிந்த ஜாக்கெட் மற்றும்

புடைவையை கொடுக்கவில்லைஎன்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

நீதித்துறை நடுவர் அரூர்.